2 2 AUG 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,
# காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

*(1995, ஜூன் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1995, ஜூன் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 — தபாற் செலவு : ரூபா 2.00

# 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

[1995, ஜூன் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. —ஓ 55/94

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அரசாங்க அதிபர்" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் இறுதிவரையுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— *464 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"அரசாங்க அதிபர், மேலதிகமாக, அனுமதிப்பத்திரத்தைப் பதிவு செய்வித்தல் வேண்டும்; அத்தகைய பதிவுக்கு கட்டணமெதுவும் செலுத்தப்படவோ அல்லது அறவிடப்படவோ ஆகாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகிறது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*"அளிப்பானது பராதீனப்படுத்தப்படும் காணியின் விவரணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

30. எந்த அளிப்பின்மீது காணியொன்று பராதீனப்படுத்தப்படவுள்ளதோ அந்த அளிப்பு ஒவ்வொன்றும் அத்தகைய காணியின் அளவையும் அதன் எல்லைகள் பற்றிய ஒரு விவரணத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.".

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1387; (வெளிநாடு) ரூபா 1849; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.